**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.R. சுஜாதா, B.Sc., L.L.M.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 26 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.04/2021 Renumbered in இ.ம.எண்.06/2022 இன்**

**அ.வ.எண்.224/2019**

T.கோபால் .... மனுதாரர்/ பிரதிவாதி

/ எதிர் /

M.ஈஸ்வரி ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 24.06.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சுந்தரராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்கறிஞரின் வாதுரையைக் கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**ஆணையுரை**

மனுசொத்தின் தற்போதைய பௌதீக தன்மையை பார்வையிட மீண்டும் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளில் இம்மனுவை முடிவு செய்வதற்கு அவசியமான சங்கதிகள் மட்டும் பின்வருமாறு:- இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவர். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் ஒருதலைபட்ச நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டார். நீதிமன்ற ஆணையர் கடந்த 16.08.2019 தேதியன்று எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய வழக்கறிஞர் முன்னிலையில் மனுதாரர் இல்லாதபோது சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார். அந்த சமயம் மனுதாரர் சொத்தை பார்வையிடுவதற்கு நீதிமன்ற ஆணையரிடம் தேவையான அறிவுரைகளை வழங்கவில்லை. அதனால், அந்த அறிக்கை மனுதாரர் தரப்பில் வழக்கை நிரூபிக்க மனுதாரருக்கு உதவிகரமாக இருக்காது. மேலும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் சொத்தின் உண்மையான பௌதீக தன்மையை குறிப்பிடவில்லை. இந்நீதிமன்றம் மூலம் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டால் நீதிமன்ற ஆணையருக்கான கட்டணத்தை மனுதாரர் செலுத்த தயாராக உள்ளார். எனவே, மனுசொத்தின் தற்போதைய பௌதீக தன்மையை பார்வையிட மீண்டும் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர் தரப்பில்**, மனுதாரர் முன்னிலையில் தான் ஆணையர் தன்னுடைய அறிக்கையை தாக்கல் செய்தார். அதனை மனுதாரர் தரப்பில் மறைப்பது சரியல்ல. மனுசொத்துக்களை அளவீடு செய்யும்பொழுது மனுதாரர் எவ்வித தகவலும் கொடுக்கவில்லை என்றும், மனுசொத்தின் உண்மை தன்மை பற்றி அறிக்கையில்

குறிப்பிடவில்லை என்றும், அதனால் மீண்டும் மனுசொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமாயும் அதற்கான கட்டணத்தை மனுதாரர் செலுத்த தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளது சரியல்ல. ஆணையர் முதல் முறை வழக்குசொத்துக்களை பார்வையிடும் சமயத்தில் தாக்கல் செய்த அறிக்கைக்கு மறுப்பு ஏதும் தாக்கல் செய்திடாத சூழ்நிலையில், மனுதாரரின் இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் நெடுந்தலைப்பு (Long Cause Title) குறிப்பிடவில்லை. மேலும், இம்மனுவை தாக்கல் செய்வதற்குண்டான சரியான முகாந்திரத்தை இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி அதனை மனுதாரர் நிரூபித்தும் இருக்க வேண்டும். ஆனால், மனுதாரர் இந்நீதிமன்றத்தில் உரிய முகாந்திரத்தை தெரியப்படுத்திடவும் இல்லை. அதனை நீதிமன்றத்தில் நிரூபித்திடவும் இல்லை. ஆகவே, அசல் வழக்கை காலதாமதப்படுத்தவே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

5) <u>**பிரச்சினை**</u> :

வழக்காவணங்கள் மற்றும் மனுவில் கண்ட சங்கதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எதிர்மனுதாரர் மட்டும் அவரது வழக்கறிஞர் முன்லையில் மனுதாரருக்கு தெரியாமல் சொத்து பார்வையிடப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த அறிக்கை சொத்தின்

உண்மையான பௌதீக தன்மையை காட்டுவதாக இல்லை என்றும், எனவே, மீண்டும் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டால் சொத்தின் தற்போதைய பௌதீக தன்மை தெரியவரும் என்று நீதின்ற ஆணையர் நியமனம் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் முன்னிலையில் தான் ஆணையர் தன்னுடைய அறிக்கையை தாக்கல் செய்தார் என்றும், அதனை மனுதாரர் தரப்பில் மறைப்பது சரியல்ல என்றும், மேலும், இம்மனுவை தாக்கல் செய்வதற்குண்டான சரியான முகாந்திரத்தை இந்நீதிமன்றத்தில் தெரியப்படுத்திடவும் இல்லை என்றும், ஆகவே, அசல் வழக்கை காலதாமதப்படுத்தவே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிர்வாதம் வைத்துள்ளார்கள்.

7) வழக்கை பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்யப்பட்டு, அது இ.ம.எண்.03/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு கடந்த 04.09.2019 தேதியன்று அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இ.ம.எண்.03/2019-ல் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு தனது ஆட்சேபணையையும் தாக்கல் செய்துள்ளார்.

8) எனவே இவ்வழக்கின் தன்மை மற்றும் இதர சங்கதிகளை கருத்தில்கொண்டு தாவா சொத்தினை மீண்டும் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு

அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தால் அது இவ்வழக்கினை தீர்மானிப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

முடிவில், வழக்கறிஞர் **திரு.K.K.தியாகராஜன் MS.No.3620/2010** என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்து மனுசொத்தின் தற்போதைய பௌதீக தன்மையை பார்வையிட்டு அறிக்கை, வரைபடம் மற்றும் புகைப்படங்கள் தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும், நீதிமன்ற ஆணையரின் ஊதியம் ரூ.8,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி, தொகையானது மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையருக்கு வரும் 08.07.2024 அன்றோ அல்லது அதற்கு முன்போ நேரடியாக செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. அழைக்க: 08.07.2024.

இவ்வாணையுரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 26 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/- R. சுஜாதா**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில்**

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :**

- இல்லை -

**(ஒப்பம்)/- R. சுஜாதா**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

---

**அசல் ஆணையுரை**

ஐ.ஏ.06/2022 இன் ஓ.எஸ்.224/2019

நாள் : 26.06.2024

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---